# இடைநிலைப் பாடசாலைக் கல்வி அனுபவ ஒழுங்கமைப்பின் நவீன வடிவங்கள்

சபா. ஜெயராசா

கற்போருக்குரிய கல்வி அனுபவங்களை ஒழுங்குபடுத்தி வழங்கும் பாரம் பரியமான செயல்வடிவங்களுள் ஒப்பீட்டளவில் அதிக முதன்மை கொண்ட தும், பரந்தளவிலே பின்பற்றப்படுவதும் பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப் பாகும். அறிவு நோக்கை நிறைவேற்றி வைக்கும்பொருட்டு, பரந்து ஆழ்ந்து, வியாபித்துச் செல்லும் அறிவு நிதியத் தொகுதியைப் பாடங்களாக வகுத்து, பாடங்களின் அடிப்படையிற் கற்றலை வளம்படுத்தி, எண், எழுத்து, வாசிப்பு என்ற பாடங்களுடன் ஆரம்பித்து, அவற்றை அடியொற்றிய தனித்தனி பாடத்துறைகளாகக் கல்விச்செயற்பாடுகள் கட்டியெழுப்பப் படுகின்றன. பாடங்களை நடுநாயகமாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் ஆகியவை இயக்கமுறும்பொழுது, அவை மனனக் காட்டுருவகை உருவாக் கிய எதிர்மறைப் பண்புகளுடன் இணைந்து நின்றமை நவீனவடிவங்கள் பற்றிய தேடுதல்களுக்குரிய தேவையைக் கொடுத்தன.

ஐரோப்பியர் வருகையும் இந்நாட்டின் கல்வி அனுபவ ஒழுங்கமைப் பிலே நிகழ்ந்த வளர்ச்சிநிலைகளும், சமூகக்கட்டுமானத்துடன் இணைந்த தாகப் பாடக்கலைத்திட்டவகை சார்ந்த ஏற்பாடுகளுக்கு மீண்டும் மீண்டும் அழுத்தங்கொடுத்தன. சொல்சார்ந்த கற்பித்தலின் மிகை அழுத்தநிலைகள் பரீட்சைகளின் ஆதிக்கநிலைகள், தனியாள் வேறுபாடுகளைத் தழுவாத கற் பித்தல் முயற்சிகள், பாடப் பரப்புக்களை உள்ளடக்கிய ஆசிரியர்பயிற்சி, பாடநெறிகளை உள்ளடக்கிய வாண்மைத்தெரிவுகள் என்பவை வளர்ந்து சென்ற நிலையில் அவை வாழ்க்கையின் இயங்கியல் மாற்றங்களுடன் பூரண மாக ஒன்றிக்கவில்லை. பாடக்கலைத்திட்டத்துடன் இணைந்த எதிர்மறைப் பண்புகளைச் சீர்திருத்தும் பரிசோதனை ஒழுங்கமைப்பு உபாயமாக 'ஹன் தெச' கலைத்திட்டம் 1932ஆம் ஆண்டில் அறிமுகம்செய்யப்பெற்றதாயினும்,[1] அது வரலாற்றுக் காரணிகளினால் ஆழ்ந்த செல்வாக்குச் சுவடுகளைப் பதிக்க முடியாதிருந்தது. அரசியற் சுதந்திரத்தின் பின்னரும் சமூக அறைகூவல்களை அணுகக்கூடிய கல்வி ஒழுங்கமைப்புக் கட்டியெழுப்பப்படவில்லை என்று கூறப் பெற்ற கண்டனங்கள்,[2] பாடக்கலைத்திட்டச் செயற்பாடுகளின் பிரதிகூலங்க ளுடனும் இணைந்து நின்றன.

உலகளாவிய முறையில், பாடக்கலைதிட்ட ஒழுங்கமைப்பின் குறைபாடு களை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளுள், பாடங்களிடையே சமநிலையைப் பொதிதல், உட்கருவாகும் பாட உள்ளடக்கத்தை நிறுவுதல், பாடங்க ளிடையே ஒன்றிணைப்பை ஏற்படுத்தும் உபாயங்களைக் கையாளுதல் என் பவை மேற்கொள்ளப் பெற்றாலும், அனைத்துத் துறைகளையும் தழுவிய முழுமையான கல்வி, பாடங்களால் மட்டும் நிறைவேற்றப்பட முடியா தென்பதை ஆய்வாளர் சுட்டிக்காட்டினர்.[3]

மாணவரின் ஆளுமைக்கோலங்கள், தனியாள் வேறுபாடு என்பவற்றுடன் இணைந்தவகையிலே பொங்கிவரும் அறிவுப் பெருக்கை இணைக்கவல்ல கல்வி அனுபவ ஒழுங்கமைப்பாகப் பின்வரும் கலைத்திட்ட வடிவங்கள் மலர்ச்சிகொண்டன.[4]

(அ) வகுப்புப்படிநிலைகள் குறிக்காக் கலைத்திட்டம். Non Graded Curriculum.

(ஆ) இரு செயல்வழிக் கலைத்திட்டம். Dual Process Curriculum.

(இ) ஓடுபாதைக் கலைத்திட்டம். Track Curriculum.

(ஈ) சுழல் ஏணிக்கலைத்திட்டம். Spiral Curriculum.

(அ) மாணவரது நெடுங்கோட்டு முன்னேற்றம், தனியாள் வளர்ச்சிநிலைகள் ஆகியவை பாரம்பரியமான வகுப்பு அடுக்கு ஒழுங்கமைப்புக்களாற் கட்டுப்படுவதை வகுப்புப்படிநிலைகள் குறிக்காக் கலைத்திட்டம் நீக்கிவைக்க முயல்கின்றது. ஒவ்வொருவரும் தத்தமது கற்றல் வேகங்களுக்கு ஏற்பவும், ஆளுமைக் கோலங்களுக்கு அமையவும் விரைந்து முன்னேறிச்செல்வதற்குரிய ஏற்பாடுகளை வகுப்புப்படிநிலை குறிக்காக் கலைத்திட்டம் கொண்டிருந்தாலும், குழுமுயற்சிகளும், சமூகவளர்ச்சிக்குரிய கூட்டுறவு மனோபாவங்களும் இதனால் வளம்படுத்தப்படும் என்று கூறமுடியாது.

(ஆ) இரு செயல்வழிக் கலைத்திட்டம் அ-வகைக்கலைத்திட்டம் போன்று மாணவரின் நீள்முக வளர்ச்சியுடன் தொடர்புடைய பிறிதொரு ஒழுங்கமைப்பாக உள்ளது. பரிசோதனை முறையாக முதனிலைப் பாடசாலைகளிலே முகிழ்த்த இக்கலைத்திட்ட வடிவம், அண்மைக்காலமாகக் கனிஷ்ட இடைநிலைகளிலும் வளர்ச்சியுற்று வருகின்றது.[5] பொதுத்திறன்களுடன் ஒழுங்குபடுத்தப்பெற்ற ஒரு பொதுநிகழ்ச்சித் திட்டத்தை உள்ளடக்கிய அனுபவங்களை ஒரு பாடசாலை நாளில் அரைப்பங்கிலே மாணவர் பெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பெற்றுள்ளது. மிகுதி அரைப்பங்கும் சிறப்பார்ந்த துறைகளைக் கற்கும் அனுபவங்களிலுமாக, இருசெயல்வழி முன்னேற்றத்தை ஈட்டும் நடவடிக்கையாக அமைக்கப்பட்டுள்ளது. பாரம்பரியமான வகுப்புநிலைகள் கொண்ட கலைத்திட்டத்தையும், நவீன ஏற்பாடாகிய வகுப்புநிலைகள் குறிக்காத கலைத்திட்டத்தையும் ஒன்றிணைக்கும் ஏற்பாடாக இந்த ஒழுங்கமைப்பு இயக்கங் கொண்டுள்ளது. வகுப்புப்படிகள் என்ற தடைகளையும், தனியாள் வேறுபாடுகளையும், இவ்வகைக் கலைத்திட்டம் ஒப்பீட்டளவில் அதிக கவனத்துக்குக் கொண்டதேயன்றி, கல்வியின் குறியிலக்கு, நிரல்ஒழுங்கு, தொடர்புறுபண்பு, ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்குரிய அழுத்தங்களை ஆழமாக்கவில்லை என்று கொள்ளமுடியும்.

(இ) ஓடுபாதைக் கலைத்திட்டம் என்பது ஒவ்வொரு மாணவரதும் ஆற்றல், உளச்சார்பு, ஆளுமை என்பவற்றுக்கேற்றவாறு ஒவ்வோர் ஓடுபாதைகளிற் கல்வியைப் பெறும்வண்ணம் அவர்களை வேறுபிரித்துவிடும் ஒழுங்கமைப்பைக் கொண்டது. 1956ஆம் ஆண்டில் வாஷிங்டன் டீ. சி. சிரேஷ்ட உயர்பாடசாலையில் நான்கு ஓடுபாதைகள் கொண்ட கலைத்திட்டம் உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.[6] அவை வருமாறு அமைந்தன.

*இ-1* சிறப்புநிலை ஓடுபாதை — இது மீத்திறன் கொண்டவர்கள் என்று கருதப்பட்டவர்களுக்குரிய ஆழ்ந்த கற்றல் அனுபவங்களைக் கொண்டிருந்தது.

*இ-11* கல்லூரித் தயாரிப்புநிலை ஓடுபாதை - *இ-1* இல் தகுதி பெற முடியாத மாணவர்களுக்குரிய கல்வி அனுபவங்களை இந்த ஓடுபாதை கொண்டிருந்தது.

*இ-111* பொதுஓடுபாதை – *இ11* இல் தகுதி பெருத மாணவர்களுக்கு உகந்தமுறையிலே இங்கு அனுபவங்கள் ஒழுங்கமைக்கப்பெற்றன.

இ-1V அடிப்படை ஓடுபாதை – *இ111* கல்விகற்கத் தகுதியற்ருேர் என்று கருதப்பெற்ற, நூற்கல்விபெறமுடியாத உளவளர்ச்சி குன்றியோருக்குரிய அடிப்படைத் திறன்களை வழங்கும் உபாயமாக இது அமைக்கப் பெற்றது.

இவ்வாருக ஓடுபாதைகளையமைத்துக் கல்வி அனுபவங்களை ஒழுங்கு படுத்துதல் தனியாள் வேறுபாடுகளுக்குரிய தீவிர அழுத்தங்களைக் கொடுக்கின்றதாயினும் கல்வியிலே சமத்துவம் என்ற கோட்பாட்டின் அடிநிலையை இந்த அமைப்புத் தகர்த்துவிடும் அபாயங்களும் உண்டு.

(ஈ) சுழல் ஏணிக் கலைத்திட்டம் – இது பல்வேறு பாடத்துறைகளுக்கு மிடையே காணப்படும் பொதுவான எண்ணக்கருக்களைக் கூட்டான முடிவுகளின் அடிப்படையாகப் பெற்று, அவற்றை அடியொற்றிய ஒழுங்கமைப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, பொதுவான எண்ணக்கருக்களை மத்தியாகக் கொண்டு, கற்றல் அனுபவ அடுக்குகளைத் தொடர்ந்து உயர்த்திச் செல்லும் உபாயங்களைக் கொண்டது.

*1964* ஆம் ஆண்டில் வாஷிங்டனில் நிகழ்ந்த தேசிய விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் கலைத்திட்டக்குழு, அடிப்படை விஞ்ஞானக் கருதுகோள்களை இனங்காண்பதிலும் பல்வேறு வகுப்புமட்டங்களிலும் அக் கருதுகோள்களை வலியுறுத்தல் தொடர்பான வரையறைகளைச் செய்வதிலும் கவனம் செலுத்தியமை,[7] இவ்வகையான கலைத்திட்டத்துடன் இயைந்த ஒரு நடவடிக்கையாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வாறே வரலாறு, பொருளியல், அரசியல், சமூகவியல், குடியியல் போன்ற பாடங்களுக்குரிய பொதுவான எண்ணக்கருக்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக அரசு, மக்களாட்சி, சமூகம், கூட்டுறவு, அபிவிருத்தி, பண்பாடு போன்ற பொதுவான எண்ணக்கருக்களை இனங்கண்டு ஒவ்வொரு படிநிலைகளிலும் எவ்வாறு அந்த எண்ணக்கருக்களைத் தொடர்புபடுத்திக் கற்பிக்கலாம், எளிதிலிருந்து சிக்கலுக்குச் செல்லும் வகையிலே கல்வி அனுபவங்களை எவ்வாறு ஒழுங்குபடுத்தலாம், என்பவற்றைக் கூட்டுமுயற்சியினுலே தீர்மானிக்கும் ஒழுங்கமைப்பாக இது விளங்குகின்றது.

இந்த ஒழுங்கமைப்பு மேலும் மேலும் ஆழ்ந்த ஆய்வுகளினுல் விருத்தி செய்யப்படவேண்டிய கோலங்களைக் கொண்டுள்ளமை ஒருபுறமிருக்க, ஒரே எண்ணக்கருவைப் பல்வேறு மட்டங்களிலும் மீண்டும் மீண்டும் கற்பிக்கும்

இரட்டித்தல் ஏற்படும் என்ற விமர்சனமும் எழுப்பப்படக் கூடியதே. இந்த அமைப்பு பாரம்பரியமான பாடக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பைத் தழுவி நின்றாலும், பாடங்களுக்கிடையேயுள்ள ஒருங்கிணைப்பையும், ஒத்த மூலக் கூறுகளையும், பொதுமையாக்கலையும் வலியுறுத்திப் பாட அனுபவவழிக்கற்றலை வளம் மிக்குடையதாக்கும் நடவடிக்கையாகவுமுள்ளது.

நவநவமானதும், வகைவகையானதுமான வழிவகைகளைக் கையாண்டு பாடசாலைகளின் நிலையை உயர்த்துதலுமாகிய ''புதிய யதார்த்தத்தை'' உருவாக்கும் கருத்துக்கள் இன்று பரந்து வளர்ச்சிபெறத் தொடங்கியுள்ளன.[8]

கல்வி அனுபவ ஒழுங்கமைப்பை வினைத்திறனுடையதாக்குவதற்குரிய ஆசிரியத்துவம் பற்றிய கண்ணோட்டம் மேலும்மேலும் வலிமைபெற்று ஆசிரியர்க்குரிய பயிற்சிகளிற் கவனம் செலுத்துதலோடன்றி, ஆசிரியர் ஒரு பாட அனுபவத்தைத் தனியாகக் கற்பித்தலை விடுத்து ஒவ்வொரு துறைக்குமுரிய ஆசிரிய ஆளணிக்குழுவொன்றை அமைத்துக் கூட்டாகக் கற்பித்தலை வளம்படுத்தும் நடவடிக்கைகளும் கடந்த இரு பதின்மங்களில் வளர்ச்சியுறத் தொடங்கியுள்ளன.[9] கூட்டுமுயற்சியுடன் பொறுப்புக்களைப் பரவலாக்கிப் பல்வேறு ஆசிரியர்களதும் திறன்களை ஒருங்குபெய்து, கற்பித்தலை வளம்படுத்த முடியுமாயினும், கூட்டுறவு, மனோபாவத்தை வளர்க்கக்கூடிய சமூகநெறிப்பாடு அற்ற போட்டியும், தனிமனித முயற்சிகளின் ஆளுகையும் மேலோங்கியுள்ள நிலையில் இவ்வகையான கற்பித்தல் வலுவிழந்துவிடலாம்.

இடைநிலைப்பாடசாலைக் கல்வி ஒழுங்கமைப்பின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட நடவடிக்கைகள், நேரஅட்டவணைகளின் நிரல் ஒழுங்கிலும் கவனஞ் செலுத்துகின்றன. இத்துறையில் நெகிழ்ச்சியுள்ளதும், வலிவும் மெலிவும் உள்ளதாகிய பாடசாலைச் செயல்நிரல் ஒழுங்கமைப்புப் பற்றிய கண்ணோட்டம் சிறப்புப் பெறுகின்றது.[10]

இலங்கைப் பாடசாலை நேர அட்டவணைகள் பொதுவாக நெகிழ்ச்சி அற்றவையாகவும், சமகூறுகளாகப் பாடநேர அலகுகள் பிரிக்கப்பட்டவையாயும், தேவைக்கேற்றவாறு தளர்த்தப்படக்கூடிய பாங்கு அற்றவையாயும் காணப்படுகின்றன. பிள்ளைகள் ஆசிரியர்களோடு கலந்து தமது தனிப்பட்ட இடர்களையும், இலக்குகளையும், இன்பதுன்பங்களையும் மனந்திறந்து பேசுவதற்கும் இயங்குவதற்குமுரிய சுதந்திரமான கற்றற் பாட நேரங்கள் ஒழுங்கு செய்யப்படவில்லை. இவ்வாறான குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நெகிழ்ச்சியும், வலிவும், மெலிவும் உள்ளதாகிய பாடசாலைக் கால அட்டவணை துணைசெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தேவைக்கேற்றவாறு பல்வேறு வகுப்பு மாணவர்களையும் இணைத்துச் சிறப்புக் குழுவாகக் கற்பித்தல், பல்வேறு வயதுத்தொகுதிகளைக் கொண்டவர்களைச் சிறப்புக் குழுவாக இணைத்துக் கற்றல் நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துதல் என்பனவும் நெகிழ்ச்சிக்காட்டுருவுடன் இணைத்துச் செயற்படுத்தக்கூடிய உபாயங்களாகும்.

முதனிலைப் பாடசாலையிலும், கனிஷ்ட இடைநிலைமட்டங்களிலும் கல்வி அனுபவ வழங்கலைத் தீவிரப்படுத்தும் நடவடிக்கையாக ''தனியாளுக்குரிய வழிகாட்டுகைக்கல்வி'' (ஐ. ஜி. ஈ.) விளங்குகின்றது.[11] ஒவ்வொரு மாணவரதும் வேறுபடும் கற்றல் நடையியல்புகளுக்கேற்ப வெவ்வேறுபட்ட கற்பித்தல் நடைகளைத் தனித்தனியாகவும் தனியாள்மீது சிறப்புக் கவனத்தைச் செலுத்தும் நடவடிக்கையாகவும் பயன்படுத்தக் கூடியவாறு அந்த அணுகுமுறை அமைந்துள்ளது.

அரசியற் சுதந்திரத்தின் பின்னர் கல்வி அனுபவ ஒழுங்கமைப்பின் நவீன வடிவங்களாக இந்நாட்டிலே அறிமுகம் செய்யப்பெற்ற நடவடிக்கைகளை நோக்கும்பொழுது, 1957 ஆம் ஆண்டிலிருந்து கல்வித்திணைக்களம் 6ஆம், 7ஆம், 8ஆம் தரங்களுக்கு இயைபுபடுத்திய பொதுவிஞ்ஞானப் பாடத்தினைக் கற்பிக்கக் கருதிய நடவடிக்கை,[12] பாடங்களிடையே ஒன்றிணைப்பையும், பொதுமையாக்கலையும், ஒத்த மூலக்கூறுகளைக் காணும் திறனையும் வளர்க்கும் ஒழுங்கமைப்பாக அமைந்தது. 1965 ஆம் ஆண்டிலிருந்து தாவரவியல், விலங்கியல் என்ற பாடக்கூறுகள் நீக்கப்பட்டு, உயிரியல் என்ற ஒன்றிணைந்த அனுபவம் கனிஷ்ட இடைநிலைகளிலே புகுத்தப்பட்டமை,[13] மேற்கூறிய செயற்பாட்டின் வளர்ச்சிநிலையினைத் தொடர்புபடுத்துகின்றது.

1972 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கமாகக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பிலே நிகழ்த்தப்பெற்ற மாற்றங்கள்,[14] தற்செயல் நிகழ்ச்சியாகவோ, தூய கல்விவடிவில் அமைந்த மாற்றங்களாகவோ கொள்ளப்படாது, நாட்டில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களின் கூட்டுமொத்த விளைவாக, பொருளாதார நெருக்கடிகளின் அறைகூவல்களுடன் இணைந்த செயற்பாடாக அமைந்ததென்று கொள்ளுதலே பொருத்தமுடையது. கலை, விஞ்ஞானம் என்ற துறைகளை உள்ளடக்கிய சமநிலைக் கலைத்திட்டத்தை உருவாக்கியமை, ஒன்றிணைந்த கல்விநெறியைச் செயற்படுத்தியமை, குறிப்பாக, சமூகக்கல்விப் பாடத்தை வலுவுள்ளதாக்கியமை, தொழில் அனுபவங்கள் வாயிலாகக் கற்றலை வளம் படுத்தியமை என்ற வகைகளிலே மாற்றங்கள் புகுத்தப் பெற்றன. சிரேஷ்ட இடைநிலையில் உட்கருவான பண்புகள் உட்புகுத்தப்பட்டு, கலை, விஞ்ஞானம், அழகியல் ஆகிய எத்துறையைச் சார்ந்த மாணவர்களும் பொதுவாகக் கற்கவேண்டிய மையமாக அமைந்த பாடங்கள் ஒழுங்கு செய்யப்பெற்றன.

1981ஆம் ஆண்டிற் கல்விச் சீர்திருத்தத்துக்காய ஆலோசனைகளின் வழங்கலிற் கல்வி அனுபவ ஒழுங்கமைப்பை நவீனப்படுத்துவதற்குரிய உபாயங்களுள் முதன்மை கொண்டதாகக் கொத்தணியமைப்பு விளங்குகின்றது.[15] இம்முறை, மூலவளங்களின் பயன்பாட்டிலே உச்சப்பயனை ஈட்டும் முகாரிப்பு ஏற்பாடுகளை வலியுறுத்தும் சால்பினைக் கொண்டதாக மொழியப்பட்டுள்ளது. சமநிலையான கலைத்திட்ட அனுபவங்களும், பாட ஏற்பாடுகளும், முன்னைய அமைப்பின் தொடர்ச்சியை மீளவலியுறுத்துவனவாகவே பெருமளவில் நிகழ்ந்துள்ளன.

தொகுத்து நோக்கும்போது கல்வி அனுபவ ஒழுங்கமைப்பின் நவீன வடிவங்கள், ஒழிப்பின் ஒழிப்பாக நடைமுறை கொள்ளும்பொழுது, பின்

னது பழையதின் பயனுள்ளவற்றை நிலைபேறுகொள்ள வைக்கின்றது. காலமாற்றங்களின் அறைகூவல்கள், புதிய புதிய தேடுதல்களைப் பிறப்பித்த வண்ணமுள்ளன. அவை ஓர் இடையறு இயக்கமாகப் படிமலர்ச்சியை ஏற்படுத்துகின்றன.

## உசாவியவை


1. ஈ. எல். விஜேமான்ன, "பாடவிதானவிருத்தி" இலங்கையிற் கல்வி, இலங்கை கல்வி கலாச்சார அலுவல் அமைச்சு, வெளியீடு, கொழும்பு, *1969, ப. 1080.*
2. *கல்வியமைச்சு, கல்வியில் புதியபாதை, கல்வியமைச்சு* வெளியீடு, *1972, ப. 3.*
3. Hilda Taba, Curriculum Development Theory and Practice, Harcourt Brace and World INC, New York, 1962, p. 387.
4. Weldon Beckner and Joe Cornet, The Secondary School Curriculum: Content and Structure, Intext Educational Publishers, Scraton, 1972, p. 443.
5. Ibid. p. 444.
6. Ibid. p. 445.
7. National Science Teachers Association, Theory into Action in Science Curriculum Development NSTA, Washington, 1964, p.20.
8. Danial C Neale and others, Strategies for School improvement, Cooperative Planning and Organization Development, Allyn and Bacow, INC, Boston, 1981, p. 49.
9. Rocert W. Richey, Planning for Teaching An Introduction to Education, Mc Grow-Hill Book Company, New York, 1979, p. 94.
10. Ibid. p. 100.
11. Ibid. p. 104.
12. *இலங்கையிற் கல்வி, முற்சுட்டியநூல், ப. 1095.*
13. *மேலது, ப. 1100.*
14. *கல்வியில் புதியபாதை, முற்சுட்டியநூல், ப. 1.*
15. *கல்வியமைச்சு, கல்விச்சீர்திருத்தத்துக்காய ஆலோசனைகள், 1981, ப.10.*